திருத்துறைப்பூண்டி பேரூராட்சி.

*வினா எண். 215—

திரு. பொ. உத்திராபதி :
திரு. இரா. தாமரைக்கனி :
திரு. என். கிட்டப்பா :
} மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு தயவு செய்து விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக ஆக்கக் கோரி அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு இதுபற்றி மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ)—(ஆ) திருத்துறைப் பூண்டி பேரூராட்சியினை நகராட்சியாக மாற்றுவதற்கான கருத்துரு நகராட்சிகளின் ஆய்வாளரின் பரிசீலனையில் உள்ளது. அரசுக்கு அறிக்கை வந்த பின்னர் அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. பொ. உத்திராபதி : தலைவரவர்களே, திருத்துறைப் பூண்டி பேரூராட்சியில் 20,000-க்கும் அதிகமான மக்கள் தொகை இருக்கிறது. சென்ற மூன்று ஆண்டுக் கணக்குப்படி அதனுடைய வருமானம் ரூ. 5,51,000-க்கு இருக்கிறது. ஆனால் அங்கே நல்ல ரோடு கிடையாது, குடிப்பதற்குத் தண்ணீர் கிடையாது, நல்ல தண்ணீர் கிடையாது, தை மாதம் வந்து விட்டால் இரண்டு மைல் நடந்து சென்றுதான் குளிக்க வேண்டியிருக்கிறது. 1974-ம் ஆண்டிலேயே அதை நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத் தாலோ அது மறுபடியும் நிறுத்தப்பட்டு இருக்கிறது. தொடர்ச்சி யாக அந்த மக்கள் அதை நகராட்சியாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள், ஊராட்சி ஒன்றியம், பேரூ ராட்சி, மாவட்ட கலெக்டர் ஆகியோர் அந்தத் திட்டத்திற்கு அனுமதியும் கொடுத்துவிட்டார்கள், ஆகவே, உடனடியாக அந்த பேரூராட்சியை நகராட்சியாக இந்தத் தேர்தலுக்குள் மாற்று வதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்தத் தேர்தலுக்குள்ளாக நகராட்சியாக ஆக்க வேண்டும் என்ற முறை யில்தான் அரசு அதைப் பரிசீலிக்கிறது.

1978 செப்டம்பர் 14]

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மன்னார்குடிக்கு அடுத்த பெரிய நகரமாக திருத்துறைப்பூண்டி விளங்குகிறது. திருத்துறைப்பூண்டியில் புகையிலை விளைகிறது. ஆகவே, அது ஒரு மார்கெட் சென்டராக இருப்பதாலும், தொழிலாளர்கள் அதிகமாக இருப்பதாலும், மாணவர்கள் அதிகமாக இருப்பதாலும், அது ஒரு பெரிய வியாபார ஸ்தலமாக இருப்பதாலும் அரசு அதில் சிரத்தை எடுத்துக்கொண்டு நம்முடைய அண்ணன் உத்திராபதி சொல்லியதைப்போல் அந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதைவிட சிறிய பேரூராட்சிகள் எல்லாம் நகராட்சிகளாக மாற்றப்பட்டு இருக்கிற போது........

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நகராட்சியாக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் அளிக்கிறபோது விரைவில் திருத்துறைப்பூண்டி பேரூராட்சி நகராட்சியாக ஆக்கப்படும் என்று சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், திருத்துறைப்பூண்டியைப் போல் வேறு எந்தப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசு ஆய்வு செய்து கொண்டு இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, திருமங்கலம், கீழக்கரை, திருக்கோவிலூர், கள்ளக்குறிச்சி, உசிலம்பட்டி ஆகிய 5 பேரூராட்சிகள் நகராட்சிகளாக மாற்ற ஆய்வு நடத்தப்படுகிறது.

பூதப்பாண்டி பேரூராட்சி.

*வினு எண். 216—திரு. செ. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கன்யாகுமரி மாவட்டம், தோவாளை ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்ட பூதப்பாண்டி பேரூராட்சியையும், சுற்று வட்டார ஊராட்சிகளையும் சேர்த்து நகர் மன்றமாக அமைக்கும் திட்டம் ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) இல்லை.

(ஆ) வினுவிற்கு இடமில்லை.